**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.533/2024 நாள்- 25.02.2026

**வா.சா.1. மகாலிங்கம்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் இந்த வழக்கின் வாதியின் பொது அதிகாரம் பெற்ற முகவர் என் ற நிலையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எந்த கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி வாதியிடம் பணத்தை திருப்பி செலுத்திவிட்டார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வாதி கூறி தான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. அடமானப்பத்திரம் பதிவு செய்த பின்பு பிரதிவாதியிடமிருந்து அசல் மற்றும் வட்டி தொகை பெறவில்லை. பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டது போன்று 18.07.2022 ம் தேதி வாதியின் சித்தப்பா மகள் சுமதியிடம் ரூ.2 லட்சத்தை கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி வாதியின் நண்பர் பாஸ்கர் என்பவருக்கு ரூ.1லட்சம் ரொக்கமாக 02.08.2022 அன்று செலுத்திய விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் சகோதரர் சரவணக்குமாரை எனக்கு தெரியும். அவர் நான் வேலை பார்க்கும் இடத்திற்கு வந்து செல்வதால் எனக்கு தெரியும். அவர் தனிப்பட்ட முறையில் வாதியிடம் ரூ.5 லட்சம் கடன் பெற்றுள்ளார் அதற்கான ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்று கேட்டால் பார்த்துள்ளேன். பிரதிவாதியின் சகோதரர் ரூ.5 லட்சத்தை வங்கி கணக்கு மூலம் நேர் செய்துவிட்டார் என்றால் சரிதான். அவர் காசோலை மூலமாக அல்லது வங்கி பரிவர்த்தனை மூலமாக பணம் அனுப்பினாரா என்று கேட்டால் ஞாபகம் இல்லை. ஆனால் அப்போது நான் உடன் இருந்ததால் எனக்கு தெரியும். பிரதிவாதி தன் சகோதரர் மூலமாகத் தான் தான் கொடுக்க வேண்டிய தொகையை காசோலை மூலமாக கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு பற்றி எனக்கு எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றும் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.